செ.வெ.எண் : 19 – 2021 நாள்: 09.01.2021

**விழுப்புரம் வி.ஆர்.பி மேல்நிலைப்பள்ளியில் விழுப்புரம் காவல்துறை சிறுவர், சிறுமியர் மன்றம் மற்றும் விழுப்புரம் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இணைந்து நடத்தும் பெண் காவலர்களுக்கான இலவச புற்றுநோய் பரிசோதனை சிறப்பு விழிப்புணர்வு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

விழுப்புரம் வி.ஆர்.பி மேல்நிலைப்பள்ளியில் விழுப்புரம் காவல்துறை சிறுவர், சிறுமியர் மன்றம் மற்றும் விழுப்புரம் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இணைந்து நடத்தும் பெண் காவலர்களுக்கான இலவச புற்றுநோய் பரிசோதனை சிறப்பு விழிப்புணர்வு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.01.2021) துவக்கி வைத்தார்.

விழுப்புரம் வி.ஆர்.பி மேல்நிலைப்பள்ளியில் பெண் காவலர்களுக்கான இலவச புற்றுநோய் பரிசோதனை சிறப்பு விழிப்புணர்வு முகாமானது 09.01.2021 மற்றும் 10.01.2021 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும். இந்த முகாமின் முக்கிய நோக்கம் பெண்காவலர்களுக்கு புற்றுநோய் கண்டறிவதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டால் அதனை பின்பற்றி மற்ற குடும்ப பெண்கள் அச்சமின்றி புற்றுநோய் பரிசோதனை மேற்கொள்வார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் விழுப்புரம் மாவட்டத்தில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த முகாமினில் இரத்த அழுத்தம் **(Blood Pressure),** இதய மின்துடிப்புப் பதிவு **(ECG)**, இரத்தப் பரிசோதனை **(Blood test)**, மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் உள்ளிட்ட பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பரிசோதனையில் பெண் காவலர்கள் எவருக்கேனும் புற்றுநோயிற்கான ஆரம்ப அறிகுறிகள் தென்பட்டால் அவர்களுக்கு சிறப்பு விடுமுறை வழங்கி மாவட்ட நிர்வாகம், காவல்துறை மற்றும் பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் மேற்சிகிச்சைக்காக அடையாறு சிறப்பு புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையிலும் மற்றும் வேலூர் சி.எம்.சி மருத்துமனையில் சிகிச்சை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்படுவார்கள் இம்முகாமினை விழுப்புரம் மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து பெண் காவலர்களும் பயன்படுத்திக் கொண்டு பயனடைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.செந்தில்குமார், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.நல்லசிவம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.